Then there are permanent employees. Whenever Work-Charged employees are required, they can be taken from the category of temporary employees but when permanent vacancies are filled up the Work-Charged employees can be taken by transfer. This is one of the long-standing demands of the work-charged employees who have not been made permanent even though they have worked for more than 10 years. So, will this Government give first preference to these Work-charged employees when permanent vacancies are filled up, and thus make a realistic approach to the whole problem and also see that their long-standing grievance is redressed ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படி நிரந்தரமாக எடுக்கிற நேரத்தில் அவர் எத்தனை ஆண்டுக்காலம் பணிபுரிந்திருக்கிறார், அவருடைய தொழில் திறன் என்ன என்றெல்லாம் பார்த்துத்தான் நிரந்தரமாக்கப்படுகிறது. மாண்புமிகு அங்கத்தினருடைய நல்ல யோசனையையும் தலைமைப் பொறியாளர் ஆய்வார்கள்.

திரு. பி. துரைராஜ் : நெடுஞ்சாலைப் போக்குவரத்தில் வேலை செய்கின்ற ஊழியர்கள் தினசரி பேருந்து வண்டிகளினால் பாதிக்கப்படுகிற ஆபத்தான நிலையில் பணி புரிகிறார்கள். அவர்களையாவது நிரந்தரமாக்க இந்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சாலைகளில் வேலைசெய்கிறபோது பேருந்து வண்டிகளினால் எப்படி ஆபத்து வரும் என்று தெரியவில்லை. வேலை நடக்கிற இடங்களில் அவை மிக மெள்ளத்தான் போக முடியும்.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, இந்த ஊழியர்களுக்கு நடு நடுவே வேலை இல்லாமல் இருக்கிற நிலையையே மாற்றுவதற்கு ஒரு வேலையையும் காண்டிராக்ட்டுக்கு விடாமல் பி.டபிள்யூ.டி.-யிலேயே எல்லா வேலைகளையும் செய்வதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அது முற்றிலும் இயலாத காரியம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : அரசினர் சிக்கன நடவடிக்கையின் காரணமாக இந்த ஊழியர்களில் எத்தனை பேர்கள் வேலையிழந்து இருக்கின்றனர் என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ருசிகரமான பதிலைக் கொடுப்பதற்கில்லை. காரணம் அதிகமான பேர்கள் வேலை இழக்கவில்லை.

ரசாயன உரங்களின் விலைகள்.

*105 வினா—**திரு. எஸ். ஜே. ராமசாமி :**
திரு. கே. விநாயகம் : } மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்த ஆண்டு ரசாயன உரம், யூரியா, அமோனியம் சல்பேட் ஆகியவற்றின் விலையை மத்திய அரசு கூடுதல் செய்ததை தடுக்க நமது மாநில அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ரசாயன உரங்களின் விலை உயர்வு குடியானவர்களைக் கடுமையாகப் பாதிக்கும் என்கிற நமது கருத்து இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம் : முன்பு, அதாவது இப்போது ஆட்சி செய்கிற கட்சி பதவிக்கு வந்தபோது என்ன விலை இருந்தது ? இப்போது உரங்களின் விலையை எந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள் ? இந்த அரசு

கொடுத்த யோசனைகளை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா? அவற்றுக்குப் பதிலாவது தெரிவித்திருக்கிறார்களா? இந்த அரசின் யோசனைகளை ஏற்றுக்கொள்கிற அளவாவது சூழ்நிலை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 31-3-1967-ல் அமோனியம் சல்பேட் 50 கிலோகிராம் பாக்கிங்கில் மெட்ரிக் டன் ரூ. 422·41 ஆக இருந்தது. அதுவே 1-4-1967-ல் 503 ரூபாயாக உயர்ந்து விட்டது. அமோனியம் சல்பேட் 100 கிலோகிராம் பாக்கிங்கில் ஒரு மெட்ரிக் டன் 31-3-1967-ல் ரூ. 411-02 ஆக இருந்தது. 1-4-1967-ல் ரூ. 492 ஆயிற்று. அமோனியம் சல்பேட் நைட்ரேட் ஒரு மெட்ரிக் டன் 31-3-1967-ல் ரூ. 516-52 ஆக இருந்தது. 1-4-1967-ல் ரூ. 577 ஆயிற்று. கால்ஷியம் அமோனியம் நைட்ரேட் (20-5) 31-3-1967-ல் ஒரு மெட்ரிக் டன் ரூ. 390-32 ஆக இருந்தது. 1-4-1967-ல் ரூ. 437 ஆக உயர்ந்தது. யூரியா 31-3-1967-ல் ஒரு மெட்ரிக் டன் ரூ. 678·95 ஆக இருந்தது. 1-4-1967-ல் ரூ. 840 ஆயிற்று. டை-அமோனியம் பாஸ்பேட் மெட்ரிக் டன் ஒன்றுக்கு 31-3-1967-ல் ரூ. 825·85 ஆக இருந்தது. அதுவே 1-4-1967-ல் ரூ. 1,095 ஆயிற்று. இம்போர்ட்டெட் அமோனியம் பாஸ்பேட் 31-3-1967-ல் மெட்ரிக் டன் ரூ. 658·25 ஆக இருந்தது. 1-4-1967-ல் ரூ. 1,095 ஆக உயர்ந்தது. இப்படி ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதியில் இருந்த விலை உயர்ந்ததற்குக் காரணமே மத்திய அரசாங்கம் ரூபாய் மதிப்பைக் குறைத்தது தான். இந்த நிலைமையை நாங்கள் பொறுப் பேற்ற பிறகு உணவு விவசாயத்துறை மகாநாட்டிலும் எடுத்துச் சொல்லி யிருக்கிறோம். நமது முதல் அமைச்சர் அவர்கள் டெல்லியில் உள்ளவர்களிடம் இதை எடுத்துச் சொல்லி, இதனால் பெரும் அளவு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ரூபாய் மதிப்பு குறைப்பினால் ஒவ்வொன்றும் நூறு ரூபாய் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. ஆகவே இந்த உயர்வுத் தொகையையாவது மானியமாக வழங்கவேண்டுமென்று கோரினார்கள். ரசாயன உரங்களுக்கு கிராக்கி இல்லாதபோது முன்பு மானியம் கொடுக்கப் பட்டது. இப்போது ரசாயன உரம் கிடைக்கவில்லையே என்று தான் கேட்கிறார்கள். ஆகவே மானியம் கொடுப்பதை நிறுத்திவிட்டோம். இப்போது இதற்காக என்று மானியம் வழங்க முடியாது நிலை இருக்கிறது என்று சொல்லி விட்டார்கள். ஆகவே இந்த விலையேற்றத்திற்கு இந்த அரசாங்கம் பொறுப்பில்லை. மத்திய அரசாங்கம் ரூபாயின் மதிப்பைக் குறைத்ததன் விளைவுதான் இது என்பதை கனம் உறுப்பினர் மறுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : மத்திய அரசு தமிழகத்திற்குப் போதுமான உரம் ஒதுக்குவதில்லை. ஆகவே, நமது மாநில அரசே உர உற்பத்திக்காக ஏதேனும் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்போதும் மத்திய அரசாங்கம் அனுமதித்தால்தான் நாம் உர உற்பத்தித் தொழிற்சாலையை ஏற்படுத்த முடியும். நமது மாநிலத்தில் நெய்வேலியில் இப்பொழுது யூரியா உற்பத்தி செய்யப்படுகிறது. 1966 அக்டோபரில் இருந்து 30 சத விகிதம் வெளிச் சந்தையிலும், 70 சதவிகிதம் மத்திய உரத் தொகுப்பிற்கு ஒதுக்கப்பட்டது. 1967-ல் 50 சத விகிதம் வெளிச் சந்தையிலும், 50 சத விகிதம் மத்திய உரத் தொகுப்பிற்குப் போயிற்று. 1968-ல் 70 சத விகிதம் வெளிச் சந்தையிலும், 30 சத விகிதம் மத்திய உரத் தொகுப்பிற்கும் போகிறது. வெளிச்சந்தைக்காக விடுவிக்கப்படுவதை அவர்கள் இஷ்டப்படி விற்கிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத் தான் வெளிச் சந்தைக்காக ஒதுக்கப்படுவதை இந்த மாநில சர்க்காருக்கே ஒதுக்கும்படியாக நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். "மத்திய அரசாங்கம் எங்கள் இஷ்டப்படி வெளிச்சந்தையில் விற்க உரிமை வழங்குகிறபோது, ராஜ்ய அரசாங்கம் ஏன் குறுக்கே வரவேண்டும்" என்று நெய்வேலியில் உள்ளவர்கள் கேட்கிறார்கள்.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு விவசாயிகளினுடைய சௌகரியத்திற்காக உரம் கார்டு சிஸ்டத்தின் மூலம் கொடுக்கப் போவதாகச் சொன்னார்கள்.

உரம் வழங்குவதற்குக் கார்டு முறை இப்பொழுது அமலாக்கப்பட்டிருக்கிறதா? மத்திய அரசாங்கத்திலிருந்து இந்த அரசாங்கத்திற்கு சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு உரம் குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்தக் கேள்வி விலையை உயர்த்தியது பற்றியது. கார்டு மூலம் உரம் வழங்கப்படுகிறதா என்று கேட்டார்கள். அமோக விளைச்சல் தரும் ரகங்களைப் பயிரிடுகின்ற இடங்களில் கார்டு மூலம்தான் உரம் வழங்கப்படுகிறது. கனம் உறுப்பினர் அவர்களும் அவர்களுடைய தொகுதியிலே ஏ.டி.டி. 27, கோ. 25, கோ. 29, ஐ.ஆர். 8, இப்படிப்பட்ட ரகங்களைப் போட்டிருந்து அவர்களுக்கு எல்லாம் கார்டு மூலம் உரம் வழங்கப்படவில்லை என்று தகவல் கொடுத்தால் நான் விசாரிக்கிறேன். சென்ற அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கம் 63 ஆயிரம் டன்தான் உரம் கொடுத்தார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு இப்பொழுது 1 லட்சத்து 5 ஆயிரம் டன் உரம் வாங்கியிருக்கிறோம் என்ற தகவலை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : நாணய மாற்று மூலமாக பண மதிப்புக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் உர விலை ஏற்றப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் உரத்திற்கு மானியம் என்ற அளவில் கொடுக்க வேண்டாம்; உற்பத்தியாகிற நெல்லுக்கு உற்பத்திச் செலவு அதிகமாவதால் அந்த அளவிற்கு உற்பத்திச் செலவு நெல்லுக்கு அதிகம் ஆகிறது என்ற அடிப்படையில் மானியம் கொடுப்பதற்கு மத்திய சர்க்காரிடம் வற்புறுத்த இந்தச் சர்க்கார் கடிதப் போக்குவரத்துச் செய்வதற்கு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கஷ்டத்தையெல்லாம் மத்திய சர்க்காருக்குக் கூறினோம். நெல் விலையை உயர்த்த வேண்டுமென்று விவசாயிகளிடமிருந்து பரவலாக, பொதுவாக கோரிக்கை இருக்கிறது. அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டுமானால் மத்திய சர்க்கார் கூடுதலாக தொகை வழங்க வேண்டுமென்று விவசாயிகளின் சார்பிலே வற்புறுத்திக் கேட்கப்பட்டது, இன்னும் கேட்டுக்கொண்டுதான் இருக்கப் போகிறோம், போகிற போதெல்லாம் கேட்கப்படுகிறது, கிடைக்கிற வரையிலும் கேட்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன.

திரு. பி.ஜி. கருத்திருமன் : ரசாயன உரத்தின் விலை திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படித் திருத்தியமைக்கப்பட்டதற்குப் பின்னால் மத்திய சர்க்காரிலிருந்து, உற்பத்தியாகும்படியான நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 46 முதல் 56 ரூபாய் வரையிலும் கொடுக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டதா ? இந்த விலையைக் கொடுப்பதற்கு இந்த சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது ரசாயன உரத்திற்கு விலையை ஏற்றியதைப்பற்றிய பிரச்னை. கனம் உறுப்பினர் அவர்கள் இதையும் ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொண்டு நெல்லுக்குக் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். மத்திய அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்களே இது நியாயமான விலை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை கனம் உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, உர விலையைக் கூட்டியும், உதவித் தொகையை நிறுத்தியும் இந்திய அரசு விவசாயிகளுக்கு நெருக்கடியை உண்டாக்கியிருப்பதால் உதவித் தொகையை மறுபடியும் பெறக் கூடிய வகையில் இதர மாநிலங்களுக்கு அனுப்பக்கூடிய அரிசியின் விலையைக் கூட்டுவதற்கு இந்திய சர்க்காரை தமிழக சர்க்கார் வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்தப் பிரச்னை இதிலிருந்து எழவில்லை.

1968 பிப்ரவரி 29]

திரு. ஆர். கருப்பையா : சென்ற ஆண்டு திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு அமோனியம் சல்பேட், யூரியா கொடுக்கப்படவே இல்லை. ஆலைகள் மூலமாக பதிவு செய்துள்ள கரும்பு பயிர் செய்கின்றவர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டது. சென்ற ஆண்டு நான் இதைப்பற்றி அமைச்சர் அவர்களிடத்தில் மனுக் கொடுத்தேன். சென்ற ஆண்டு கிடைக்கவில்லை, இந்த ஆண்டாவது அவர்களுக்கு அமோனியம் சல்பேட் போன்ற உரங்கள் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கொடுத்துக்கொண்டுதான் வருகிறார்கள். கொடுக்கப்படாத பகுதிகள் இருக்கின்றன என்று கனம் அங்கத்தினர் அவர்கள் தகவல் கொடுத்தால் தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன், அல்லது நேரில் வந்தும் கவனிக்கிறேன்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : உரத்தின் விலை உயர்த்தப்பட்டு இருப்பதால் உரம் உபயோகிப்போர்களின் எண்ணிக்கையின் அளவும் குறைந்து உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : விலை உயர்ந்ததனுல் உரம் உபயோகிப்போர்களுடைய எண்ணிக்கை குறையவில்லை. மேலும் மேலும் அதிகமாகிறது. கோ. 25, கோ. 29 போன்ற உயர் ரக நெல் விளைவிக்க வேண்டுமென்பதால் அவற்றையும் உரம் கொடுக்கப்படக்கூடிய ரகங்களுடன் சேர்க்க வேண்டுமென்று கேட்டோம். மத்திய சர்க்காரிடமிருந்து அங்கீகாரம் இப்பொழுதுதான் கிடைத்திருக்கிறது. ஆகவே உரம் உபயோகிப்போர்களுடைய எண்ணிக்கை கூடுதலாக வழியிருக்கிறது. உரம் உபயோகிப்போர்களுடைய எண்ணிக்கை குறையவில்லை. மற்ற ரகங்களுக்கும் உரம் கொடுங்கள் என்று வற்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள். எல்லா தானியங்களுக்கும் எல்லா ரகங்களுக்கும் கனம் அங்கத்தினர் குறிப்பிட்டபடி கரும்புக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்றுதான் முயற்சி செய்கிறோம். இந்த ஆண்டிலே உரத் தட்டுப்பாடு என்ற நிலை, அமோக விளைச்சல் ரகங்களைப் பயிரிடுவதைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட குறை வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி : இந்த உர விநியோகத்தை கடந்தகால அரசாங்கம் மக்களுக்குப் பயன்படுகிற, தேசத்திற்கு நலன் விளைக்கின்ற பொருளாகக் கருதாமல் வியாபார நோக்கத்தோடு டி.சி.எம். எப்., ஷா வாலஸ் போன்ற ஏஜென்ஸிஸ் கம்பெனிகள் மூலமாக . . .

THIRU K. VINAYAKAM : I do not mind the Member charging the old Government tor any lapses. This is a question relating to the price of fertilisers and the supplementary questions can only be with regard to the price. This gentleman is talking about the old Government doing something wrong. Is he going to utilise the question hour for this kind of insinuation ? I want a ruling from the Chair.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விலையையொட்டிய கேள்வியை மட்டுமே கேட்க முடியும். அருள்கூர்ந்து குற்றச்சாட்டு—இந்த அரசை பற்றியோ, அந்த அரசைப் பற்றியோ—கேள்வி நேரத்தில் செய்ய முடியாது—பொது விவாதத்தின்போதுதான் செய்ய முடியும்—செய்யாமல், தகவல்கள் கேட்பதற்காக வினுக்களைக் கேட்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி : வியாபாரப் பொருளாக மாற்றி ஒரு சிலருடைய பொறுப்பில் விடப்பட்டதன் மூலமாக கமிஷன் என்றெல்லாம் போவதால் விலை ஏறியிருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ஆகவே கமிஷன் ஏஜென்டுகள் மூலமாக விடாமல் உரத்தை உற்பத்திசாலையிலிருந்து நேரடியாகப் பிளாக்கிற்கு அனுப்பக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினருடைய கேள்வி உரத்தை மிக்ஸ் செய்வதைப் பற்றிக் கேட்கிறார்கள். தனிப்பட்ட கம்பெனிகள் மூலமாகத்தான் மிக்ஸ் பண்ணுகிறார்கள். கூட்டுறவுத்துறை மூலமாகவும், தனியார் துறை மூலமாகவும், சில மாவட்டங்களில் உரம் வழங்கப்படுகிறது. அவற்றில் குறைகள் இருக்கின்றன என்று கனம் உறுப்பினர் தகவல் கொடுத்தால் அது பற்றிக் கவனிக்கப்படும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : உரத்தின் விலையை சென்ட்ரல் கவர்ன்மெண்ட் உயர்த்தியிருக்கிறது, அதற்குத் தகுதியான நிவர்த்திக்கும் அது ஒத்துக்கொள்ளவில்லை. மாகாண சர்க்கார்தான் புரக்யூர்மெண்ட் செய்கிறது. மார்க்கெட்டிலே அதிகப்படியாகக் கிடைக்கிறது. இதை உத்தேசித்தாவது இந்தக் கண்ட்ரோலை ரத்து செய்து விவசாயிகள் மார்க்கெட்டில் அதிகப்படியாக விற்கின்ற அளவில் வாங்கிக்கொண்டு அவர்கள் இதை நிறைவு செய்துகொள்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது உரத்தைப் பற்றிய கேள்வி. கண்ட்ரோலை எடுக்க வேண்டும், ரேஷனை எடுக்க வேண்டும் என்பது எல்லாம் கோரிக்கை. இது உரத்தைப் பற்றிய கேள்வி. இதைப் பற்றி இப்பொழுது சொல்லப்படும். வேறு சந்தர்ப்பத்தில் அதற்குப் பதில் சொல்ல வாய்ப்பு ஏற்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், ரசாயன உர விலை உயர்வின் காரணமாக விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்பொழுது இருப்பதைவிட, ஏப்ரல் முதல் தேதியிலிருந்து ரயில்வே கட்டணம் உயர்த்தப்படுகிறது, புதிய நோட்டு அச்சடிக்கப்படுகிறது. இதனாலே மீண்டும் விலை உயர்வு ஏற்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படி இருக்கும்பொழுது எப்படி கடுமையாக இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று இந்த சர்க்கார் கருதுகிறதோ அந்த முறையிலே இதில் மத்திய சர்க்காரைக் கடுமையாக எதிர்த்து இதைக் குறைக்கச் செய்வதற்கு இந்த சர்க்கார் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ரயில்வே கட்டணம் உயர்வைப் பற்றியெல்லாம் என்னைக் கேட்டால் நான் என்ன சொல்ல முடியும் ? இது உரத்தைப் பற்றிய கேள்வி. கனம் உறுப்பினர் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் பார்லிமெண்டில் இருக்கிறார்கள். அவர்கள் இதைப் பற்றி அங்கே கேட்கலாம். அவர்கள் சார்பிலே விவாதிப்பதற்கு அங்கே சந்தர்ப்பம் இருக்கிறது. உரத்தின் விலையைக் குறைக்க வேண்டும் என்று எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் அங்கேயிருந்து வாதாடிக்கொண்டு இருக்கிறார்கள். அமைச்சர்களும் இதைப் பற்றி வலியுறுத்திக்கொண்டு வருகிறார்கள்.

திரு. தி. பொன்னுமலை : காவேரியிலிருந்து தண்ணீர்ப் பாய்ச்சினாலும் சரி, ஏரிகள் மூலம் தண்ணீர்ப் பாய்ச்சினாலும் சரி, உரம் ஒரே விலையாகத்தான் இருக்கிறது. பம்பு செட்டுகள் மூலம் தண்ணீர்ப் பாய்ச்சுகின்ற சேலம் மாவட்டத்தில் ராசிபுரம், நாமக்கல் போன்ற இடங்களில் இருக்கின்ற விவசாயிகளுக்கு உர விலை குறைவாகக் கொடுக்க சர்க்கார் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மு.ப. 10-00 **மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** உரத்தை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபாடாக விலை வைத்துக் கொடுக்கும்படியான நிலைமையை உருவாக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : உரத்திற்கான மானியத்தை மத்திய சர்க்கார் நிறுத்திவிட்டதன் காரணமாக விலை உயர்ந்துவிட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் போலவே நெல்லுக்கான விலையை மத்திய சர்க்கார் உயர்த்திய பிறகு மாநில சர்க்கார் உதவித் தொகையை

1968 பிப்ரவரி 29]

நிறுத்திவிட்டது. ஆகவே, மத்திய சர்க்கார் உரத்திற்குக் கொடுத்துவந்த உதவித் தொகையை நிறுத்திவிட்டதை ஈடு செய்யும் வகையில் மாநில சர்க்கார் மானியத் தொகையை தர முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நான் இது பற்றிப் பதில் சொன்ன நேரத்தில் கனம் அங்கத்தினர் அவர்கள் எங்கோ கவனித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். இந்த உரத்தின் விலை உயர்வுக்குக் காரணம் ரூபாயின் மதிப்புக் குறைப்பினால்தான் என்பதை மீண்டும் ஞாபகப் படுத்துகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : நாணய மதிப்புக் குறைப்பின் காரணமாக இந்த நைட்ரஜன் உர வகைகளின் விலை ஏறி இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. நம் நாட்டிலுள்ள நிலக்கடலைப் புண்ணாக்கில் இந்த சத்து அதிகமாக இருப்பதால் இதனை அதிகமான அளவு ஏற்றுமதி செய்வதைத் தடுக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : புண்ணாக்கை ஏற்றுமதி செய்வதா, வேண்டாமா என்பது தனிக் கேள்வி. மணிலா உற்பத்தி செய்கிறவர்கள் கூடுதலான அளவுக்கு இதனை ஏற்றுமதி செய்யவேண்டுமென்று கோருகிறார்கள். இதன் ஏற்றுமதியைத் தடுக்க வேண்டுமென்றும் சிலர் கோருகிறார்கள். பொள்ளாச்சிப் பகுதியிலிருந்து கோரிக்கைகள் வருகின்றன. அரசாங்கம் இதைப் பற்றிப் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : இதன் ஏற்றுமதி முழுவதற்கும் தடை விதிக்க வேண்டுமென்று சொல்லவில்லை . . .

திரு. வி. டி. அண்ணாமலை : இரசாயன உரத்தின் அவசியத்தைப் பார்க்கும்போது, தமிழகத்திலே 80 சத விகிதம் மக்கள் விவசாயிகளாக இருக்கின்ற நிலையில், தமிழகத்திலே உரத் தொழிற்சாலை ஒன்றை அமைக்க இந்த சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இதைப் பற்றி நான் ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் நான் சொன்ன பதிலைக் கேட்டிருந்தால் இந்தக் கேள்விக்கே இடமில்லாமல் இருந்திருக்கும். நெய்வேலி உர உற்பத்தித் தொழிற்சாலையின் உரிமை மத்திய சர்க்காரிடத்தில் இருக்கிறது. அவர்கள் எரிபொருளை வாங்குகிறவர்களுக்கு உரத்தை விற்கிறார்கள். சில இடங்களில் அவர்கள் உரத்தைக் கொடுத்து நெல்லைப் பெற்றுக்கொள்கிறார்கள். அந்த உரத்தை நம்முடைய அரசாங்கமே பெற்றுக்கொண்டு அதற்குப் பதிலாக நெல்லாக வேண்டுமென்றாலும் தருகிறோம் என்று சொன்னாலும் அவர்கள் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. எரி பொருள் வாங்குகிறவர்களுக்கு உரம் கொடுப்பது என்ற முறையை மாற்றி அரசாங்கத்திற்கு நேரடியாகக் கொடுக்க வேண்டுமென்பது பற்றி மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி வருகிறோம்.

Dr. H. V. HANDE : Sir, from the figures given by the Hon. Minister, I understand that the average increased cost is Rs. 75 to 80 per tonne. We are having 4 lakh tonnes of fertilisers and that works out to an increase of nearly Rs. 3 crores. In the tug-of-war between the Centre and the State, the agriculturists are suffering. After all, the subsidy amount that would be required comes to about Rs. 3 to 3½ crores. Now that the Government have given a subsidy with regard to the one-rupee-a-measure scheme which comes to Rs. 6 to 7 crores, will this Government consider with sympathy the position of the agriculturists and come forward to give them this subsidy of Rs. 3 crores so that they can get the fertiliser at the same rate as they were getting before ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சர்க்காருக்கு இருக்கிற நிதி நிலையில் கனம் அங்கத்தினர் அவர்களுடைய கோரிக்கையைக் கவனிக்க முடியாத நிலை இருக்கிறது என்பதை அனுதாபத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : நெய்வேலியில் உற்பத்தி செய்யப்படும் இரசாயன உரங்கள் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரம் அத்தனையும் தமிழக சர்க்கார் வாங்குகிறது. அதிலே ஏற்படுகிற நஷ்டத்தை ஈடுகட்ட தமிழக சர்க்காரோடு பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருக்கிறது. அதே போன்று உர உற்பத்தி முழுவதையும் அவர்கள் நமக்குத் தரவேண்டும். இதிலே அவர்களுக்கு லாபம் வருகிறது என்பதால் தரமாட்டேன் என்கிறார்கள். நஷ்டத்தில் நமக்குப் பங்கு, லாபத்தில் நமக்குப் பங்கு இல்லை என்ற நிலைமை இருப்பதால் இரண்டையும் ஒருசேர வைத்துப் பேச்சு வார்த்தை நடத்தி அந்த உரத்தையும் நம்முடைய சர்க்காரே பெற்று விவசாயிகளுக்குக் கொடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நெய்வேலி உரம் பூராவையும் ராஜ்ய அரசாங்கமே வாங்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறோம். நெய்வேலி நிறுவனத்தார், மத்திய சர்க்கார் அவர்களுக்குக் கொடுத்திருக்கிற உரிமையை ராஜ்ய சர்க்கார் ஏன் பறிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்த ஆண்டு 30 சத விகிதம், பிறகு அடுத்த ஆண்டு 50 சத விகிதம், அதற்கு அடுத்த ஆண்டு 70 சத விகிதம், அதற்குப் பிறகு முழுமையும் பொதுச் சந்தையில் விற்பதற்கு மத்திய சர்க்கார் உரிமை வழங்கியிருக்கிறது. அந்த உரம் முழுவதையும் மாகாண சர்க்காரிடத்திலேயே கொடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரை வற்புறுத்தி வருகிறோம். மத்திய சர்க்காரோடு பேச்சு வார்த்தை நடத்துகிறபோது கனம் அங்கத்தினர் கூறிய ஆலோசனை பயன்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : மத்திய சர்க்காரைக் கேட்டு பத்து கோடி ரூபாய் மானியம் வரும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திட்டவட்டமாக மத்திய அரசாங்கத்தோடு போராடியாவது இந்த சர்க்கார் விவசாயிகளுக்கு முன்பு கொடுத்துவந்த சப்ஸிடியைக் கொடுக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மத்திய அரசாங்கம் பத்து கோடி ரூபாய் கொடுப்பதாகச் சொல்லவில்லை. பத்து கோடி ரூபாய் கொடுத்தால் இந்தப் பிரச்னை சுலபமாகத் தீர்ந்துவிடுவதோடு மற்றப்படி சிறு சிறு பாசன வசதிகள் கூடச் செய்து கொடுக்க முடியும். திரு அன்னா சாகிப் சின்டே அவர்கள் மதுரை வந்தபோது கூட 6½ கோடி ரூபாய் கொடுப்பதாகத்தான் சொன்னார்கள். பத்து கோடி ரூபாய் கொடுப்பதாக நான் இந்த அவையில் சொல்லவில்லை.

திரு. கே. விநாயகம் : உரத்தின் விலையைப் பொறுத்த வரை வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிற காரணத்தால் நாணய மதிப்புக் குறைப்பின் காரணமாக விலை ஏறியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உற்பத்தி விலை அதிகமாகிறது என்று சொல்லி இந்தியாவிலேயே உற்பத்தியாகிற உரத்திற்கு நீங்கள் வந்த பிறகு விலையை ஏற்றியிருக்கிறார்களா ? அதன் காரணமாக விலை அதிகமாகியிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்தியாவிலே, மாநிலத்திலே உற்பத்தியாகிற உரத்தைப் பற்றிய தகவலை கொடுக்கவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த அரசாங்கத்தின் மீது பழி போட்டு மத்திய அரசாங்கத்தைக் காப்பற்றலாம் என்று நினைக்கிறார். கனம் அங்கத்தினர் அவர்கள் கேள்வி மூலம் மத்திய அரசாங்கத்தைக் காப்பாற்ற முடியாது.

(திரு. கே. விநாயகம் எழுந்தார்)

1968 பிப்ரவரி 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவிற்குப் பதில் சொல்லாமல் இருப்பதற்கு அமைச்சருக்கு உரிமை உண்டு.

சுற்றுலா மாளிகைகள்

***106 வினா.—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு தாழ்த்தப் பட்டோர் நல-செய்தித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

யாத்திரீகர் ஸ்தலமாக விளங்கும் ஸ்ரீரங்கத்தில் டூரிஸ்ட் பங்களாக்கள் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : ஸ்ரீரங்கம் தமிழ்நாட்டில் தலைசிறந்த யாத்திரிகர் ஸ்தலமாக இருந்து வருகிறது. ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். அதனுடைய கலைச் சிறப்பை அறிந்த யுனஸ்கோ பல லட்சக்கணக்கான ரூபாய்களை நன்கொடையாக கொடுத்து சீர்திருத்திக் கொண்டு வருகிறது. ஆகவே, திருச்செந்தூரில் கட்டியுள்ளது போல் ஸ்ரீரங்கத்திலும் டூரிஸ்ட் பங்களாக்களைக் கட்டுவது பற்றி இனியாவது பரிசீலிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஸ்ரீரங்கத்திற்கும் திருச்சிக்கும் இடையே ஏறத்தாழ மூன்று மைல் தூரந்தான் இருக்கிறது. பெரும்பாலான பயணிகள் திருச்சியில் தங்கியிருந்து ஸ்ரீரங்கத்திற்குச் செல்லுகிறார்கள். அங்கிருந்து ஸ்ரீரங்கத்திற்கு இரண்டு நிமிஷத்திற்கு ஒரு பஸ் போகிறது. ஆகவே, ஸ்ரீரங்கத்தில் இப்போது டூரிஸ்ட் பங்களா கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

திரு. எம். எஸ். மணி : ஸ்ரீரங்கத்தில் அதிகாலத்தில் ஏராளமான சத்திரங்களைக் கட்டிப் போட்டிருக்கிறார்கள். இப்போது புதிதாக ஒன்றிரண்டு ஓட்டல்களில் ரூம் கட்டியுங்கூட அங்கு தங்குவதற்கு யாரும் செல்வதில்லை. திருச்சி மையமாக இருப்பதால் அங்குதான் தங்குகிறார்கள். ஆகவே ஸ்ரீரங்கத்திற்கு டூரிஸ்ட் பங்களா இப்போது அவசியமில்லை என்பதை அமைச்சர் அவர்கள் உணருகிறார்களா ?

(விடை இல்லை)

***107 *Q.*—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Harijan Welfare and Information be pleased to state whether there is a proposal to construct a Tourist Bungalow in Kumbakonam town ?**

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இத்தகைய திட்டம் எதுவும் அரசிடம் தற்பொழுது இல்லை.

திரு. நா. காசிராமன் : முதல் கேள்விக்குப் பதில் அளிக்கும் போது திருச்சி ஸ்ரீரங்கத்திற்கு மூன்று மைல்களுக்குள்ளாக இருக்கிறது, அங்கு டூரிஸ்ட் பங்களா இருக்கிறது என்று சொன்னார்கள். அது உண்மை. தஞ்சை ஜில்லாவில் கும்பகோணம் வாணிபத் துறையிலும், விவசாயத் துறையிலும், மத சம்பந்தமாகவும், கல்வி சம்பந்தமாகவும் மிக முக்கியமான ஒரு நகரம். அங்கு வந்துபோவோர்களின் எண்ணிக்கை அதிகம். அங்குள்ள பயணி மாளிகையில் இடம் போதவில்லை ; எஸ்டிமேட்ஸ் கமிட்டி சார்பில் வந்தவர்கள் கூட சமீபத்தில் கஷ்டப்பட்டார்கள் என்பதையும் உணர்ந்து அரசாங்கம் அங்கு ஒரு சுற்றுலா மாளிகை கட்ட முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கல்வி சம்பந்தப் பட்டவர்கள், வாணிகர்கள் செல்கிறார்கள் என்றால் இப்போதுள்ள வசதிகளே ஏராளமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தவிர பக்தர்கள் செல்வதற்காக என்று கட்டித் தருவதற்கான அவசியம் இல்லை. கும்பகோணத்தில் 12